*1*

# தேவன், மனித இனம் & பாவம்

## (ஆதியாகமம் 1–3)

*ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்கள், வேதாகமத்தின் எஞ்சிய பகுதியைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலுக்கு அஸ்திபாரமாக உள்ளன. ஆங்கிலத்தில் உள்ள “Genesis” என்ற வார்த்தை “தொடக்கங்கள்” என்று அர்த்தப்படுகிறது மற்றும் ஆதியாகமம் புத்தகமானது, இருக்கிற ஒவ்வொரு விஷயத்தின் தொடக்கத்தைப் பற்றி நமக்குக் கூறுகிறது: படைக்கப்பட்ட அண்டம், வாழ்வு, பாவம் மற்றும் மரணம் பற்றியும்கூட. இந்த அறிவானது வேதவசனங்களைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதலுக்கு அவசியமானதாக உள்ளது, ஏனெனில் இது ஆதியாகமத்திற்குப் பின்புள்ள வேதாகமத்தின் எழுத்தாக்கங்கள் ஒவ்வொன்றிலும் யூகிக்கப்படுகிறது. ஆகவே ஆதியாகமம் 1-3 வரையிலான அதிகாரங்கள் உண்மையாகவே ஒரு திறவுகோல் வசனப் பகுதியாக உள்ளது.*

### தேவன்

யாரேனும் ஒருவர், “வேதாகமம் எதைப்பற்றியது?” என்று கேட்டால், அது “தேவனைப்” பற்றியது என்று நாம் ஒரே வார்த்தையில் மிகச்சரியாகப் பதில் அளிக்க முடியும். ஆதியாகமத்தின் முதல் வசனத்தில் இருந்து வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரம் வரையில், இது யாவும் தேவனைப் பற்றியதாகவே உள்ளது. விரிவாக்கத்தில், வேதாகமம் மனித இனத்தின் வரலாற்றையும், குறிப்பாக பாவத்துடனான நமது போராட்டம் மற்றும் மீட்பிற்கான நமது தேவை ஆகியவற்றையும், கூறுகிறது. நாமல்ல ஆனால் தேவனே ஒவ்வொன்றின் மையக்கருத்தாக இருக்கிறார்.

‘‘ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்’’ (ஆதியாகமம் 1:1). தேவனுடைய இருப்பைப் பற்றி விவாதித்தல் அல்லது அதைப் பற்றிக் கலந்துரையாடுதல் என்பதற்கு மாறாக, தேவனுடைய இருப்பை *யூகித்து* வேதாகமம் தொடங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது. அது ஏன் அவ்வாறு உள்ளது? தேவன் இருத்தல் என்பது சுய ஆதாரம் கொண்டதாக உள்ளது. படைப்பு ஒன்று இருக்கும் என்றால், படைத்தவர் ஒருவர் இருந்தாக வேண்டும். வனப்பாகக் கட்டப்பட்ட சித்தரிக்கப்பட்ட புத்தகம் ஒன்றை நாம் கண்ணோக்கும் போது, அது ஒரு அச்சகம், ஒரு மை தயாரிப்புத் தொழிற்சாலை மற்றும் ஒரு புத்தகக் கட்டுதல் செய்யும் அலுவலகம் ஆகியவற்றில் சமகாலத்தில் ஏற்பட்ட விபத்தின் விளைவாக நடந்தது என்று நாம் ஒருக்காலும் யூகிப்பதில்லை. மாறாக, நாம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அந்தப் புத்தகத்தை எழுதி, அதில் சித்திரங்களை வரைந்து, அதை அச்சிட்டு மற்றும் அதைப் புத்தக வடிவில் ஒழுங்கமைத்தனர் என்று தர்க்கரீதியாக யூகிக்கிறோம். இது மாத்திரமே பகுத்தறிவுக்கு ஏற்ற முடிவாக உள்ளது. படைக்கப்பட்ட அண்டத்தின்

எல்லா சிக்கலான தன்மைகளுடனும் அதைக் கண்ணோக்குவதும் அதை யாரோ ஒருவர் படைத்தார் என்பதைத் தவிர வேறு எதையாவது யூகித்தலும் முற்றிலும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாக உள்ளது.

"தேவன் இல்லை என்றால், ஒவ்வொரு பொருளும் எங்கிருந்து வந்தது?" என்ற கேள்வியானது, கடவுள் நம்பிக்கையற்றவர்கள் போதிய அளவுக்குப் பதில் அளிக்க ஒருக்காலும் இயலாத கேள்வியாக இருந்துள்ளது. உலகத்தொடக்கத்தின் போது பெருவெடிப்புகள் நிகழ்ந்ததாலும் வாயுக்கள் ஒன்று கலந்ததாலும் உலகம் உண்டானது என்று குறிப்பிடுதல் ஒன்றும் செய்ய இயலாது, ஏனென்றால் இது இந்த நிகழ்ச்சிகள் நடக்கத் தேவையான "மூலப் பொருட்களின்" இருப்பைப் பற்றிய விபரம் எதையும் தருவதில்லை. ஒன்றுமில்லாமையில் இருந்து ஒன்றும் வருவதில்லை, எனவே நம்மைச் சுற்றிலும் நாம் காணும் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு "முதற்காரணம்" இன்னும் இருந்தாக வேண்டும்.

தேவன் இருக்கிறார் என்ற தெளிவான சத்தியத்தை முட்டாள் மாத்திரமே மறுப்பார் என்று சங்கீதம் 14:1 கூறுகிறது. முட்டாள்கள் எவ்வகையிலும் ஆதியாகமத்தைக் கவனித்தல் என்பது சாத்தியமானதல்ல என்பதால், வேதாகமம் அவர்களிடத்தில் விவாதம் செய்தல் அல்லது தேவனுடைய இருப்பை "நிரூபிக்க" முயற்சி செய்தல் என்பதைக் கொண்டு தொடங்குவதில்லை.

ஆதியாகமம் 1:1 வசனமானது, அண்டத்தின் தோற்றம் பற்றிப் பழங்கால மக்கள் பொதுவாக நம்பியிருந்தவற்றிற்கு நேர் எதிரானதாக நிற்கிறது. பழங்காலத்தவர்கள் யாவரும், அண்டத்தின் வடிவமைப்பில் பல்வேறு வழிகளில் ஈடுபட்டிருந்த பல "கடவுள்களை" நம்பினர் என்பது நடைமுறை உண்மையாக இருந்தது. சிலர், கடவுள்களுக்கு இடையில் நடந்த வான்வெளி யுத்தங்கள் ஏதோ ஒரு வகையில் பொருளின் வடிவமைப்பை விளைவித்தது, அது கடைசியில் நீங்களும் நானும் அறிகிற வகையிலான உலகமானது என்று விவரித்தனர்.

இதற்கு மறுபுறத்தில் ஆதியாகமம், தேவன் ஒருவரே, அவர் மாத்திரமே இருக்கின்ற எல்லாவற்றையும் படைத்தவர் என்று கூறுகிறது. இருக்கிற எல்லாவற்றிற்கும் ஆதாரமூலம் தேவனே என்று ஆதியாகமம் 1 மற்றும் 2 அதிகாரங்கள் எவ்வாறு முன்வைக்கின்றன என்பதைக் கவனியுங்கள். உதாரணமாக, 1:1-19 வசனப்பகுதியானது, எல்லாப் பொருட்கள் மற்றும் தாவர வாழ்வு ஆகியவற்றின் படைப்பைப் பற்றி விவரிக்கிறது. 1:20-25ல் நாம், மிருக ஜீவன்களின் பல்வேறு வடிவமைப்புகளின் படைப்பைப் பற்றி வாசிக்கிறோம். கடைசியாக, படைப்பு பற்றிய விபரமானது மனித வாழ்வின் தொடக்கத்தில் உச்சநிலை அடைகிறது (1:26-30; 2:4-25). செய்தி தெளிவானதாக உள்ளது: தேவன் இல்லாத நிலையில் <u>எதுவும்</u> இருப்பதில்லை!

அதுபோலவே, தேவனுடைய இயல்பின் குணாதிசயங்கள் படைப்பின் விபரத்தில் வெளிப்படையாகத் தெரிகின்றன. இந்தக் குணாதிசயங்கள் இந்த அதிகாரங்களில் விவரிக்கப்பட்டு இருப்பதில்லை; மாறாக அவைகள் செயல்விளக்கப்படுத்தப்படுகின்றன. தேவனுடைய குணாதிசயம் அவர் செய்கிறவற்றின் மூலமாக <u>செயல்விளக்கப்படுகிறது</u>. வேதாகமத்தில் பிற்பாடு, ஒரு நபரின் பண்பு அவர் <u>செய்கிறவற்றின்</u> மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. வேதாகமத்தில் பிற்பாடு, ஒரு நபரின் பண்பு அவர் செய்கிறவற்றின் மூலமாக அறியப்பட முடியும் என்று இயேசு போதித்தார் (மத்தேயு 7:15-20). இது தேவனைப் பொறுத்த மட்டிலும் சம அளவு உண்மையாகவே உள்ளது.

**வல்லமை**

உதாரணமாக, படைப்பு பற்றிய விபரத்தில் இருந்து நாம், தேவனுடைய வல்மையைப் பற்றிக் கற்றறிகிறோம். அவர் தமது "பேச்சினாலேயே" ஒவ்வொரு பொருளையும் படைக்கக் கூடியவராக இருக்கிறார். நம்முடைய வார்த்தைகள் போலின்றி, தேவனுடைய வார்த்தைகள் முற்றிலும் செயல் விளைவு கொண்டவையாக உள்ளன; அவர் ஏதேனும் கூறுகிறார் என்றால், அது நடக்கிறது. சங்கீதம் 33:6ம் வசனம் இந்த சத்தியத்தை எதிரொலிக்கிறது: "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது." அதுபோன்றே, ஏசாயா 55:10, 11 வசனங்கள் பின்வருமாறு அறிவிக்கின்றன:

*மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி,*
*அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து,*
*அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து,*
*விதைக்கிறவனுக்கு விதையையும்,*
*புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,*
*அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்;*
*அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்,*
*அது நான் விரும்புகிறதைச் செய்து,*
*நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.*

தேவனைப் பற்றிய இந்த விஷயத்தை நாம் அறிகிற வேளையில், தேவன் பேசுகிறபோது நாம் அதைக் கவனித்தல் அவசியமாக உள்ளது என்பது தெளிவாகிறது!

**அறிவுக்கூர்மை**

ஆதியாகமம் 1-3ல் இருந்து நாம், தேவனுடைய *அறிவுக்கூர்மை* பற்றியும் கற்றறிகிறோம். 1ம் அதிகாரத்தை நெருக்கமாக வாசிப்பதில் நாம், படைப்பின் கவனம் நிறைந்த வடிவமைப்பு மற்றும் ஒழுங்கமைவு ஆகியவற்றைக் கவனிக்கிறோம். தேவன் ஒழுங்கின்மையில் இருந்து ஒழுங்கமைவைக் கொண்டு வந்தார் என்று ஆதியாகமம் 1:2 காண்பிக்கிறது. பின்பு அவர் உயிர் இயக்கமற்ற பொருட்களை, தாவர உயிரினங்களை, மிருக உயிரினங்களை மற்றும் கடைசியாக மனித உயிரினத்தைப் படைத்தார். படைப்பு என்பது அரைகுறையானதாக அல்லது "தற்செயலான ஒன்றாக" இராமல் பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாக மற்றும் ஒழுங்கமைவு கொண்டதாக இருந்தது. நாம் வாழும் உலகத்தின் வடிவமைப்பு, இதை வடிவமைத்தவரின் மேதைத்தன்மைக்குச் சாட்சி பகர்கிறது. இதற்கு நேர்மாறாக, அண்டம் என்பது தற்செயலாக நேர்ந்த விபத்தினால் விளைந்தது என்று விளக்கச் செய்யப்படும் எல்லா முயற்சிகளும் மதியீனமானவையாகவே ஒலிக்கின்றன!

பல ஆண்டுகளுக்கு முன்னர் நான், டெக்சாசில் வாழ்ந்து கொண்டிருக்கையில், அரசகிரீட வண்ணத்துப்பூச்சிகள் மெக்ஸிகோ செல்லும் வழியில் வருடந்தோறும் பறந்து வரும் நிகழ்வைக் காணும் வாய்ப்பு ஒன்றைப் பெற்றிருந்தேன். (மாபெரும் சிந்தைகள் பல முயற்சி செய்திருப்பினும்), வடக்கு அமெரிக்காவில் இருந்து இந்த அரசகிரீட வண்ணத்துப்பூச்சிகள் ஒருசில ஏக்கர்கள் மாத்திரமே

பரப்புக் கொண்ட மெக்ஸிகோ பகுதிக்கு வருவது ஏன் என்பதை ஏதோ சில காரணத்தினால் எவராலும் விளக்கப்படுத்த முடியவில்லை. அவற்றில் பல இலட்சக்கணக்கானவை, எங்கே செல்கின்றன என்றே தெரியாத வகையில் தத்திப் பறப்பதாகத் காணப்படுகின்றன, இருப்பினும் கடைசியில் அவையாவும் மெக்ஸிகோவின் ஒரே இடத்தில் வந்து நிற்கின்றன. தேவன் இல்லை என்றால், இது ஏன் நடக்கிறது என்று ஒருவர் வியப்படைய வேண்டியுள்ளது. வண்ணத்துப் பூச்சிகள் ஒன்றுகூடி வரவேண்டிய வேளை எப்போது என்பதையும் மிகச்சரியாக அவைகள் எங்கே ஒன்றுகூட வேண்டும் என்பதையும் அவை "எவ்வாறு" அறிகின்றன? ஏதோ ஒரு "புராதன காலத்து வண்ணத்துப் பூச்சி" முதலில் இந்தப் பயணத்தை மேற்கொண்டு, பின்பு அது திரும்பி வந்து ஏதோ ஒருவகையில் அதைப் பற்றி மற்ற வண்ணத்துப் பூச்சிகளுக்குச் செய்தி அளித்தது என்று நாம் கற்பனை செய்ய வேண்டுமா? தற்செயலாக அவை ஒவ்வொரு ஆண்டிலும் அதே இடத்திற்கு வந்து சேருதல் நடைபெறுகிறதா? இந்த நுண்ணிய உயிரினங்களைத் தேவன் உண்டாக்கியது மாத்திரமல்ல ஆனால் இவை இந்த வருடாந்திரப் பயணத்தை மேற்கொள்ளும்படியாகவும் இவற்றிற்குள் "திட்டத்தை வைத்தார்" என்று ஒப்புக்கொள்வது எவ்வளவு அதிகமாகப் பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாக உள்ளது! இப்படிப்பட்ட ஒரு படைப்பாளர் முற்றிலும் புரிந்துகொள்ளப்பட இயலாத அறிவுக்கூர்மை உடையவராக இருக்கிறார் என்பது தெளிவு.

**நற்குணம்**

இந்த அதிகாரங்கள் தேவனுடைய நற்குணத்தைப் பற்றியும் சாட்சி அளிக்கின்றன. 1ம் அதிகாரத்தின் முடிவில், "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது" என்று நமக்குக் கூறப்படுகிறது (1:31அ). தேவனுடைய இயல்பின் நற்குணம் அவர் உண்டாக்கிய ஒவ்வொன்றிலும் பிரதிபலிக்கிறது. இது நமக்கு என்ன ஒரு ஆச்சரியமான செய்தியாக உள்ளது! தேவன் நல்லவரா அல்லது பொல்லாதவரா, அவர் நம்மீது அன்புகூருகிறாரா அல்லது நம்மை வெறுக்கிறாரா, நம்மை ஆசீர்வதிப்பதா அல்லது தமது உலகத்தில் நம்மை முற்றிலும் பாழாகும்படி சேதப்படுத்துவதா, எது அவரது விருப்பநோக்கமாக உள்ளது என்பவற்றைப் பற்றி நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

தேவன் பிற்பாடு "மாம்சத்தில் வந்தார்" என்ற சித்தரிப்பை நாம் வேதாகமத்தின் தொடக்கத்தில் இருந்தே காணத்தொடங்குகிறோம். வேதாகமம் முழுவதிலும் நாம், இதே தேவன் தாம் உண்டாக்கிய உலகத்தைத் தொடர்ந்து எவ்வாறு படைத்து, பாதுகாத்து ஆசீர்வதிக்கிறார் என்பதைக் காணுகிறோம்.

## மனித இனம்

ஆதியாகமத்தில் மனித இனத்தின் படைப்பு பற்றிய கலந்துரையாடல், தன்னிலேயே ஒரு தலைப்பாக அல்ல, ஆனால் படைப்பாளரான தேவனுடன் உறவு என்ற வகையில் வருகிறது. "மனிதன்" (எபிரெய மொழியில், *ஆதாம்*) - இது ஆணையும் பெண்ணையும் உள்ளடக்குகிறது பற்றிய முதல் குறிப்பிடுதலானது 1:26அ வசனப் பகுதியில் உள்ளது, அங்கு தேவன், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று கூறினார்.

மனிதன் என்பவன் மாத்திரமே தேவனுடைய படைப்புகளிலேயே, "[அவரது] சாயலில்" மற்றும் "[அவரது] ரூபத்தில்" படைக்கப்பட்ட ஒரே படைப்பாக இருக்கிறான் என்பது இந்த முதல் குறிப்பில் மிகவும் கவனிக்கத்தக்க விஷயமாக உள்ளது. மனிதர்கள் உடல்ரீதியாகத் தேவனைப் போல இருப்பது சாத்தியமற்றதாக உள்ளது, எனவே இந்தக் கூற்று அர்த்தப்படுத்துவது என்ன? "தேவனுடைய சாயலில்" இருத்தல் என்பது அறிவுக்கூர்மை, படைப்பாக்கம் மற்றும் அன்புகூரும் திறன் போன்ற விஷயங்களில் தேவனுடைய சொந்த இயல்பைப் போன்று இருத்தல் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. இது, மக்கள் பரிணாம அளவுகோலில் "மிக உயர்வான மிருகங்களாக" மாத்திரம் உள்ளனர் என்ற நவீன கருத்திற்கு எதிராகச் செல்கிறது என்பது தெளிவு. (சமீபத்தில் ஒரு ஆராய்ச்சியாளர், சிம்பான்சி குரங்குகள் மனிதனுடன் சேர்ந்து *ஹோமோ சேப்பியன்கள்* என்று அழைக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து இன்னும் தாண்டிச் சென்றார்.) 26ம் வசனத்தின் பிற்பகுதியானது, நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருத்தல் என்ற கருத்தை விளக்கவும் உதவி செய்கிறது: "அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள்." தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருத்தல் என்பது, பூமி மற்றும் எல்லா வகைத் தாவரங்கள் மற்றும் மிருக ஜீவன்கள் உட்பட, படைப்பின் மற்ற யாவற்றின் மீதுள்ள துணை ஆளுமையின் ஒரு வகையை உள்ளடக்குகிறது. இந்தக் கருத்தானது. 28 முதல் 30 வரையிலுள்ள வசனங்களில் மறுவலியூட்டப்படுகிறது, அதில் பூமியை "நிரப்பி அதைக் கீழ்ப்படுத்திக் கொள்ளும்படி"யும் படைக்கப்பட்ட மற்றவற்றின் மீது ஆளுகையைக் கொண்டிருக்கும்படியும், ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டளையிடப் பட்டது. மனிதன் என்பவன் தேவனுடைய படைப்பின் மீது முழுமையான அதிகாரியாக இருப்பதில்லை, ஆனால் அவன் தேவனுடைய பதிலாளாக மாத்திரம் இருக்கிறான். நாம் படைப்பின்மீது அதிகாரமும் பொறுப்பும் கொண்டவர்களாக இருக்கிறோம். அது (படைப்பு) நாம் வீணாக்குவதற்கானதாக அல்ல, ஆனால் பயன்படுத்துவதற்கானதாக உள்ளது. தேவனுடைய சாயலில் படைக்கப் பட்டு இருத்தலில், மனிதர்கள் மற்ற படைப்புயிர்கள் எல்லாவற்றிலும் இருந்து தனிப்பட்ட வகையாக உள்ளனர் என்பது தெளிவு. இந்த சத்தியமானது, தற்போது பிரபலமாகி வருகிற (ஆனால் உண்மையில் மிகவும் பழங்காலத்தைச் சேர்ந்த) "இயற்கை வழிபாடு" என்ற நடைமுறைகளையும் இல்லாததாக ஆக்குகிறது. பூமியும் ஆகாயமும் நமது "தாயாகவும்" "தந்தையாகவும்" இருப்பதில்லை. அவைகள் தேவனுடைய படைப்பின் ஒரு பகுதியாக உள்ளன, அவற்றின் மீது நாம் அதிகாரம் கொண்டிருக்கிறோம், தேவனுடைய சார்பாக அதை நாம் பயன்படுத்துகிறோம்.

ஆதியாகமம் 2ம் அதிகாரத்திற்குள் கண்ணோக்குகையில் நாம், மனிதராக இருத்தலின் "விசேஷத்துவத்தினுடைய" இன்னொரு முகப்பளவைக் கண்டறிகிறோம். மனிதன் என்பவன் படைப்பாளரின் நேரடியான, சொந்தத் தொடர்பின் விளைவாகப் படைக்கப்பட்டான்: "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7).

இவ்வகையான ஒன்றுபோலிருக்கும் வகையில் வேறு எந்த படைப்புயிரும் படைக்கப்படவில்லை; எஞ்சியவை யாவும் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டன. மனிதனுடைய வாழ்வோ தேவனுடைய சுவாசத்தில் இருந்து நேரடியாகவே வருகிறது.

அதுபோன்றே, படைப்பு பற்றிய விபரமானது, மனிதர்கள் தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் ஒரு உறவுமுறையை மகிழ்வுடன் அனுபவிக்கும்படி படைக்கப் பட்டனர் என்று வலியுறுத்துகிறது. இது தேவனுடைய மற்ற படைப்புக்களைப் பொறுத்தவரையில் இவ்வாறு இருப்பது இல்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவன் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார் என்ற உண்மையானது, 2:7ல் அறிமுகப்படுத்தப்பட்ட உறவுமுறையில் தனித்தன்மையைப் பற்றி மேலும் கருத்துத் தெரிவிப்பதாக உள்ளது. தேவனுடன் ஒரு உறவுமுறையில் வாழ்வதற்காக அவர்கள், அந்த உறவுமுறையின் நிபந்தனைகளை அறிய வேண்டியதாக இருந்தது. அத்தேனே பட்டணத்தில் பவுல் நிகழ்த்திய அவரது புகழ் பெற்ற பிரசங்கத்தில், அவர் தேவன்/மனிதன் ஆகியோருக்கிடையிலான இந்த விசேஷித்த உறவைப் பற்றிக் கூறினார்:

> உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை. மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; *கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத்தேடும்படிக்கு அப்படிச்செய்தார்*; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (நடபடிகள் 17:24-27; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

ஆதியாகமத்தில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதைப் பவுல் ஆமோதித்து உறுதிப்படுத்தினார்: நாம் நம்மைப் படைத்தவருடன் ஒரு உறவுமுறையைக் கொண்டிருக்கும்படியாகப் படைக்கப்பட்டோம். அந்த உறவு நிலைநாட்டப்படாத வரையிலும் நாம் வாழ்வின் உண்மையான நிறைவைக் கண்டறிய இயலாது. வேதாகமம் முதன்மையாக இதைப் பற்றியதாகவே உள்ளது.

நாம் ஒருவர் மற்றவருடன் உறவுகொண்டிருப்பதற்காகவும் தேவன் நம்மைப் படைத்தார். ஆதியாகமம் 2:18ல் தேவன், "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று அறிவித்தார்." மனிதனுக்கு ஒரு துணை மாத்திரமல்ல, ஆனால் அவனுக்கு "ஏற்ற," அதாவது அவனது சொந்த இயல்புக்கு இணையான மற்றும் அவன் தனது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு துணை அவனுக்குத் தேவையாக உள்ளது. ஆகவே தேவன் அவனுக்கு ஒரு "துணையை" படைத்தார். ("துணை" என்ற வார்த்தை கீழானது என்ற எந்த விஷயத்தையும் மறைமுகமாக உணர்த்துவதில்லை, ஏனெனில் இது வேறொரு இடத்தில் தேவன்

நமது "துணையாளராக" ["சகாயராக"] இருக்கிறார் என்பதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக உள்ளது; காண்க சங்கீதம் 30:9.) மனுஷியைப் படைத்ததைப் பற்றியும் அவளை மனிதனிடத்தில் தேவன் கொண்டு வந்ததைப் பற்றியும் 19 முதல் 25 வரையிலுள்ள வசனங்கள் விவரிக்கின்றன. தேவனால் படைக்கப்பட்ட மிருக ஜீவன்கள் யாவற்றையும் ஆதாம் ஏற்கனவே ஆய்வு செய்து, ஒவ்வொரு உயிருக்கும் பெயரிட்டிருந்தார், இது அவரைப் போல் எதுவும் இல்லாததால் அவரது தனிமையைச் சந்தேகமற்ற வகையில் அவருக்குள் மறுவலியூட்டியிருந்த ஒரு செயல்முறையாக இருந்தது. அவரிடத்தில் தேவன் பெண்ணைக் கொண்டு வந்தபோது, அவர் சந்தோஷத்தினால் வியப்படைந்தார், "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்" என்று கூறினார் (2:23). இப்போது அவர் தம்மைப்போல் ஒரு துணையை, அவர் தமது வாழ்வின் மிக ஆழமான உணர்வறிவைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு துணையைத் தாம் கொண்டிருந்ததை உணர்ந்தறிந்தார்.

ஆதியாகமம் 1-3 அதிகாரப் பகுதி, தேவன் சிருஷ்டிகராக இருப்பதால், அவரது கட்டளைகளை நாம் செயல்படுத்துதல் அல்லது புறக்கணித்தல் பற்றி, அவர் நமக்குக் கட்டளை இடவும் நம்மை நியாயந்தீர்க்கவும் உரிமை கொண்டுள்ளார் (அதாவது நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று அவர் கூறினார்) என்பதையும் காண்பிக்கிறது. இது ஆதியாகமம் 2:15-17ல் மிகவும் வெளிப்படையாக உள்ளது:

> தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டார்.

இவ்வசனப் பகுதியானது, கட்டளை மற்றும் கணக்கு ஒப்புவித்தல் பற்றிய இரு கூறுகளைக் கொண்டுள்ளது. தேவன் நமக்கு வெறுமனே "ஆலோசனைகளை ஏற்படுத்துவது" இல்லை. அவர், சுய நிறைவு மற்றும் தனிப்பட்ட சந்தோஷம் ஆகியவற்றிற்கு வழிநடத்துகிற பணியை (மாத்திரம்) செய்கிற நமது "சிகிச்சையாளராக" இருப்பதில்லை. அவர் நம்மை உண்டாக்கியவராக இருக்கிறார், நாம் அவரது கட்டளைகளுக்கான நமது பதில் செயல்களுக்காக அவருக்குப் பதில் கொடுத்தாக வேண்டும்.

நாம் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டுள்ள தேவனுடைய பூமியின் படைப்பாக மாத்திரம் அல்ல, ஆனால் நாம் மாத்திரமே அவருக்கு எதிராகக் கலகம் செய்யக் கூடியவர்களாக இருக்கும் வகையில் தேவன் நம்மைப் படைத்துள்ளார் என்பது நேர்முரணான விஷயமாக உள்ளது. இது பாவம் என்ற உலகளாவியப் பிரச்சனைக்கு வழிநடத்துகிறது.

## பாவம்

கட்டளை மற்றும் எச்சரித்தல் ஆகியவற்றின் வழியாகத் தேவன்

பாவத்தைத் தடைசெய்ய முயற்சி செய்தார்: "... புசிக்கவேண்டாம் ... சாகவே சாவாய்." தேவன் விசாரணையின்றி நியாயந்தீர்க்கிறவராகவும் ஆக்கினைக்கு உட்படுத்துகிறவராகவும் அடிக்கடி சித்தரிக்கப்படுகையில், வேதவசனங்கள் முழுவதிலும் அவர் நியாயந்தீர்ப்பதற்கு முன்னர் அவர் எப்போதுமே எச்சரிக்கை செய்பவராக இருக்கிறார் என்பதை நாம் காணுகிறோம். இஸ்ரவேல் மக்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொடுப்பதற்கு முன்னர், பல ஆண்டுகளாகத் தீர்க்கதரிசிகள் மூலமாகத் தேவன் அவர்களை எச்சரித்தார்! அவர் "துர்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல்" இருக்கிறார் (எசேக்கியேல் 33:11). ஆகவே பாவம் நடைபெறுவதைத் தவிர்க்க அவர் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார். உண்மையில் தேவன் வேதவசனங்களின் மூலமாக நம்மை எச்சரிப்பதை இன்னமும் முடித்திருப்பதில்லை.

தேவன் மீதும் அவரது வசனத்தின் மீதும் நம்பிக்கையற்ற நிலையிலிருந்து பாவம் விளைகிறது. சர்ப்பத்தால் (சாத்தானால்; வெளிப்படுத்தின விசேஷம் 12:9) ஏவாள் சோதிக்கப்பட்டது பற்றிய பரிதாபமான வரலாற்றை, அவரது வஞ்சனைக்கு அவள் பணிந்து போனதையும் பின்பு அவள் தன்னுடன் பாவம் செய்யும்படி ஆதாமை இழுத்ததையும் பற்றி ஆதியாகமம் 3:1-7 கூறுகிறது. முதலாவது சாத்தான், கீழ்ப்படியாமை மற்றும் மரணம் ஆகியவற்றைப் பற்றித் தேவன் அவர்களிடத்தில் கூறியிருந்தவற்றை மறுத்தான். "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று அவன் கூறினான், இது "இல்லை" என்ற மூன்றெழுத்து வார்த்தையைக் கூட்டுவதன் மூலம் தேவனுடைய சத்தியத்தை முற்றிலும் புரட்டிப் போடுவதாக இருந்தது. பின்பு அவன், ஆதாமும் ஏவாளும் மிகநல்ல சிலவற்றை மகிழ்வுடன் அனுபவிப்பதைத் தேவன் தடை செய்தார் என்று கருத்துத் தெரிவித்தான்: நன்மை தீமையை அறிகிற அறிவு. இந்த அறிவினால் ஆணும் பெண்ணும் தேவனைப் போன்று ஞானம் உள்ளவர்கள் ஆகிவிட்டால் போட்டி நிலவும் என்று தேவன் பயப்பட்டார் என்று அவன் மறைமுகமாகக் கூறினான்.

6ம் வசனம் விதிவசமான தீர்மானத்தைப் பதிவு செய்துள்ளது: "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, ..." அவள் தன்னைப் படைத்தவர் மீது நம்பிக்கையற்றுப் போகும்படிக்குத் தன்னை வஞ்சிக்க அனுமதித்தாள், அதாவது அவள் ஒரு தடையை மீறினாள். பவுல் ஆர் ஹவுஸ் அவர்கள், "தேவன் மீது நம்பிக்கையற்ற தன்மையுடன் பாவம் தொடங்குகிறது, இது ஒருவர் தம்மைத் துன்புறுத்தும் விஷயத்தை விரும்பி ஏங்குதலாக, சத்தியத்தின் வெளிப்பாட்டைப் புறக்கணிப்பதாக மற்றும் நிறைவாக அழிவில் முடிவதாக உள்ளது" என்று கருத்துத் தெரிவித்தார்.[1] ஆணும் பெண்ணும் தேவன் மீது நம்பிக்கையற்றுப் போய், அதற்குப் பதிலாக, சோதிப்பவனின் வார்த்தைகளை நம்பிய உடனே அவர்கள் தங்களைப் படைத்தவருக்குக் கீழ்ப்படியாத குற்றம் செய்தவர்கள் ஆயினர்.

ஆதியாகமம் 3:8-13 வசனப் பகுதியின்படி, தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு தகர்க்கப்பட்டது மாத்திரமின்றி, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவும் அதேபோலாயிற்று. முதல் தம்பதியர் இப்போது, தேவனுடைய பிரசன்னத்தை வரவேற்பதற்குப் பதிலாக, அவரிடத்தில் இருந்து

தங்களை ஒளித்துக் கொண்டனர். அவர்கள் தாங்கள் நிர்வாணமாக இருப்பதை எவ்வாறு அறிந்தனர் என்று அவர் கேள்விகேட்ட போது, ஆதாம் தமது சொந்த செயல்களுக்குப் பொறுப்பு உள்ளதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, ஏவாள் மீது - மற்றும் தேவன் மீது மறைமுகமாக - பழிசுமத்தினார்: "என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்" (3:12). மிகப் பெரும்பான்மையான மக்கள் இன்னமும் இவ்வாறே வாழ்ந்து வருகின்றனர் என்பது துரதிர்ஷ்ட வசனமானது: தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் உள்ள உறவில் ஒளித்துக் கொள்ளுதல் மற்றும் பழிசுமத்துதல். 11 முதல் 16 வரையில் உள்ள வசனங்கள், நல்ல உறவுகள் ஏன் இவ்வளவு அரிதாக உள்ளன என்பதை விளக்குகிறது. சமாதானமும் இசைவிணக்கமும் இருந்த இடத்தில் இப்போது மன இறுக்கம் மிகவும் இயல்பாக வருகிறது. நாம் நமது வாழ்விற்காக மாத்திரமல்ல, ஆனால் மற்றவர்களுடன் நல்ல உறவுகளைக் கொண்டிருப்பதற்காகவும் செயல்பட வேண்டும் - இது மக்களில் பலர் செய்ய மறுக்கும் விஷயமாக உள்ளது.

சர்ப்பம், ஆண் பெண் மற்றும் படைப்பு முறைமீதும் கூட தரப்பட்ட "சாபங்களின்" வரிசை, பாவத்திற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதைத் தேவன் விதிக்கிறார் என்று நமக்கு நினைவூட்டுகிறது; அதை அவர் காணாது விட இயலாது. இந்த "சாபங்கள்" தேவனுக்குக் கீழ்ப்படியாமையின் தவிர்க்க இயலாத விளைவுகளை உண்மையாக எடுத்துரைக்கின்றன. தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது, நாம் மன்னிக்கப்பட்டாலும் அதனால் (பாவத்தினால்) உண்டாகும் விளைவுகள் *எப்போதுமே* உள்ளன என்று நாம் அறிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

நாம் பாவம் செய்திருந்தாலும், தேவன் நம்மைக் கைவிட்டு விடுவதில்லை என்பது இந்த வரலாற்றில் உள்ள நற்செய்தியாகும். இது ஆதியாகமத்தின் விபரத்தில் இருந்தும் தரவழைக்கப்படுகிறது. *முதல் சுவிசேஷக் கூற்று* என்று சில வேளைகளில் அழைக்கப்படுகிற, ஆதியாகமம் 3:15ம் வசனத்தில், வரவிருந்த மீட்பர் பற்றிய நற்செய்தி பற்றிய முதல் கூற்று அடங்கியுள்ளது. இது தனது தோற்றகாலச் சந்தர்ப்பப் பொருளில் மிக மங்கலமான ஒரு வாக்குத்தத்தமாக உள்ளது, வேதாகமரீதியான வெளிப்படுத்துதல் இதழ்விரியும்போது இது இன்னும் அதிக வெளிச்சமுள்ளதாகிறது. இவ்வசனம், "அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று கூறுகிறது. புதிய ஏற்பாட்டின் கண்ணோக்கில் இருந்து, இது - தற்காலிகமாகத் தமது சொந்த ஜீவனை இழந்து போகுதல் என்ற விலையைக்கூடக் கொடுத்து, சாத்தானுடைய தலையையும் அவனது செயல் களையும் நசுக்க இருந்த - இயேசுவைப் பற்றிய குறிப்பாக உள்ளது என்பது தெளிவாகிறது.

தேவன், பாவம் நிறைந்த தமது படைப்புயிர்களுக்காக அக்கறை கொள்ளத் தொடர்ந்தது பற்றிய மற்ற குறிப்புகள் நமது வசனப் பகுதியில் காணப்படுகின்றன. தேவன், "ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்" என்பது எவ்வாறு என்பதை ஆதியாகமம் 3:21ம் வசனம் விவரிக்கிறது. அது மனதை நெகிழ்விக்கும் ஒரு காட்சியாக உள்ளது. கடுங்கோபம் மூண்ட படைப்பாளர், தம்மை எதிர்த்து நின்ற தமது சந்ததியை அழித்து, அவர்களுக்கு தமது முதுகைக் காண்பிப்பதற்கு மாறாக, அவர்களின் நிர்வாணத்தையும், அவர்கள் தங்களுக்குத் தாங்களே கொண்டுவந்திருந்த

வெட்கக் கேட்டையும் மறைப்பதற்காக, தாமே அவர்களுக்கு உடைகளைத் தயார்செய்து கொடுத்தார். அது வரவிருந்த நல்லவிஷயங்களுக்கான ஒரு நல்ல அறிகுறியாக இருந்தது. அதுபோன்றே, 22 முதல் 24 வரையில் உள்ள வசனங்கள், நாம் கவனமாக வாசிக்காவிட்டால் காணாது விட்டுவிடக்கூடிய அன்பின் செயல் ஒன்றைப் பற்றி நமக்குக் கூறுகின்றன. தேவன், ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்தில் இருந்து வெளியேற்றி, ஜீவ விருட்சத்தில் இருந்து கனியை அவர்கள் புசித்து அதினால் அவர்கள் என்றென்றைக்கும் உயிரோடு இருந்துவிடாதபடிக்கு, ஜீவவிருட்சத்திற்குச் செல்லும் வழியை அடைத்தார். அவர்கள் பாவம் செய்யாது இருந்திருந்தால், அவர்கள் தேவனுடன் இசைவிணக்கமாக என்றென்றும் வாழ்ந்திருப்பார்கள் என்று யூகிக்கலாம். கலகம் செய்கிற மற்றும் பாவம் நிறைந்த படைப்புயிர்கள் என்ற வகையில் அவர்கள் என்றென்றும் வாழ அனுமதிக்கப்படக் கூடாதிருந்தது. பிறந்துள்ள ஒவ்வொரு மனிதரும் பாவியான நிலையில் இன்னமும் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தால் உலகமானது எவ்வளவு பயங்கரமான இடமாக இருக்கும் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க மாத்திரமே முடியும்! அதைத் தேவன் அனுமதிக்கக் கூடாதவராக இருந்தார் - ஆனால் அவர் இன்னும் தமது செய்கையை முடித்திருக்கவில்லை, ஜீவ விருட்சம் இன்னமும் நிலவுகிறது. அதற்குச் செல்லும் வழி “காவல் செய்யப்பட்டிருக்கிறது,” ஆனால் வழியானது மீண்டும் அனுமதிக்கப்படும். (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5), ஏனெனில் இந்தப் பரிதாபகரமான இழப்பு இயேசு கிறிஸ்துவினால் மாற்றிப்போடப்பட்டது. பாவம் இருந்த நிலையிலும் படைப்பாளர் இன்னமும் கட்டுப்பாடு செலுத்தக் கூடியவராக இருக்கிறார், மற்றும் பாவமானது முடிவில் வெற்றிபெற்றதாக இராது. இது இன்னமும் தேவனுடைய உலகமாக உள்ளது, நாம் இன்னமும் அவருடைய படைப்புயிர்களாக இருக்கிறோம். அவர் நம்மைக் கைவிட்டு விடமாட்டார்.

## முடிவுரை

வேதாகமத்தின் எஞ்சிய பகுதியானது பாவம் என்ற பிரச்சனைக்கான தீர்வைப் பற்றியதாக உள்ளது. அந்தத் தீர்வு பற்றி நாம் மதித்து உணரக்கூடுவதற்கு முன்னர், அந்தப் பிரச்சனையை விளக்கி உரைக்கும் கொள்கைகளைப் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் ஒரு நல்ல மற்றும் அன்புகூருகிற தேவனால், அவரது படைப்புச் செயலின் உச்சகட்டமாக, அவரது வசனத்தின் மீது நம்பிக்கை வைத்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற விருப்பநோக்கத்தில் படைக்கப்பட்டுள்ளோம். இருப்பினும் நாம் பாவம் செய்தோம் மற்றும் மரணம் என்பது தவிர்க்க இயலாத வகையில் பின்தொடருகிறது. ஆதியாகமம் 1-3 அதிகாரங்களை நாம் வாசித்து முடிக்கும் இவ்வேளையில், ஒரு மீட்பர் தேவை என்ற ஏக்கம் நமக்குள் கண்டறியப்பட வேண்டும்.

---

குறிப்பு

[1]Paul R. House, *Old Testament Theology* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1998), 64-65.

## *“நமது சாயலாக”?*

*ஆதியாகமம் 1:26ல் பன்மைப் பெயர்ச்சொற்கள் பயன்படுத்தப் பட்டிருத்தல் பற்றி அதிகமான கலந்துரையாடல் சூழ்ந்துள்ளது. அவை அர்த்தப்படுத்தக் கூடியது என்ன? ஒரே ஒரு தேவன் இருக்கிறார் என்பதால், மற்றும் (இவ்வசனத்தின் வேளையில்) இன்னமும் ஒருவரும் படைக்கப்படாது இருந்தனர் என்பதால், அவர் யாரிடத்தில் பேசிக்கொண்டிருந்தார்? அவர் மனிதர்களுக்கு முன்னரே படைக்கப்பட்டிருந்த தேவதூதர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தார் என்பது ஒரு கருத்தாக உள்ளது. இது சாத்தியமானதாகவே உள்ளது, ஆனால் வேதாகமம் இவ்வாறு கூறுவதில்லை.*

*இது ‘‘மாட்சிமையின் பன்மைத்தன்மையாகும்,’’ இதில் பேசுபவர் தம்மைப்பற்றியே பன்மையில் குறிப்பிட்டுக்கொண்டார், உண்மையில் இது “நான்” என்றே அர்த்தப்படுகிறது என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. ஒருவேளை, தேவன் - பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று நபர்த்துவத்தில் நிலவுகிறார், மற்றும் இந்தப் பிரதிப்பெயர்ச்சொல் இம்மூவருக்கும் இடையில் நிகழ்ந்திருக்கக் கூடிய ஒரு ‘‘உரையாடல்’’ அல்லது கருத்தூன்றி சிந்தனை பற்றிய சிலவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறது என்ற உண்மையை இவ்வசனம் பிரதிபலிக்கிறது என்பது கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான விளக்கமாக உள்ளது. (ஆதியாகமம் 1:2ல் படைப்பின் நிகழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பணியைப் பற்றியும், யோவான் 1:3, 10 மற்றும் எபிரெயர் 1:2 ஆகிய வசனங்களில், படைப்பு நிகழ்வில் கிறிஸ்துவும் ஈடுபட்டிருந்தார் என்பது பற்றிய கூற்றுகளையும் கவனிக்கவும்.) இது புதிய ஏற்பாட்டில் பிற்பாடு தேவனுடைய மூன்று வகை இயல்பைப் பற்றிய குறிப்புகளுடன் இசைவு கொண்டுள்ளது.*